அம்பத்துார் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 118/2017 RCOP: /

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.R. இளங்கோ என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2024ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 06–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| வா.சா.1 | 06.12.2024 |
| பெயர் | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:–

8. நான் செய்து வந்த தொழிலுக்கு சேவை வரி கட்டினேனா என்றால் தற்போது தொழில் செய்யவில்லை. தொழில் செய்தபோது வரி கட்டிவந்தேன். சென்னை மாநகராட்சியின் தொழில் உரிமம் பெறவில்லை. சிறுதொழில் நிறுவனத்திலும் எந்த சான்றும் பெறவில்லை. வழக்கு சொத்தில் எத்தனை குடியிருப்புகள் உள்ளது என்றால் நான் மட்டும் தான் இருக்கிறேன். தரைதளம் மற்றும் மேல் ஓடு போட்ட கட்டிடம். மேலே 2 அறைகள் உள்ளது. நிலவரி எதுவும் கட்டவில்லை. வருவாய் துறையின் பட்டா எதுவும் கிடையாது.

9. 1997க்கு முன்பு மின்இணைப்பு எனது பெயரில் இருந்தது பின்னர் பிரதிவாதியின் பெயருக்கு மாற்றப்பட்டது. குடிநீர் இணைப்பு யார் பெயரில்

உள்ளது என்றால் அந்த வசதி இல்லை. 1997 ல் பத்திரம் பதிவு செய்தபிறகு  சுவாதினத்தை பிரதிவாதியிடம ஒப்படைத்தேனா என்றால் தெரியவில்லை. அன்றில் இருந்து நான் தான் குடியிருந்து வருகிறேன். குடியிருப்பதற்கு பிரதிவாதிக்கு எந்த வாடகையும் கொடுக்கவில்லை.

(வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரனை தொடரச்சி  வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)